பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

# நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா - தேசிய மகளிர் தின விழா !

## சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 3000 மகளிர்க்கு நல உதவிகள்!



கடலூர் ,மார்ச்,10-

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு, 3,000 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

காடாம்புலியூர் AV மஹாலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. சபா. இராசேந்திரன் தலைமை தாங்கினார். திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்றி னார். தொகுதி பார்வையாளர் பா. துரைசாமி வரவேற்புரை வழங்கினார்

நிகழ்ச்சியில் பேசிய பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள், திராவிட இயக்க வரலாறு, முதலமைச்சர் அவர்களால் மகளிர் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விரிவாகக் குறிப்பிட்டார்.

விழாவில் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் சபா.பாலமுருகன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், ஒன்றிய அவைத்தலைவர் ராஜா, குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், நெய்வேலி நகரச் செயலாளர் குருநாதன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ்குமார், மாவட்டப் பிரதிநிதி ஆடலரசன், ஒன்றியத் துணைச் செயலாளர்கள் செல்வகுமார், சுமதிநந்தகோபால், வழக்கறிஞர் அரிதாஸ், இளைஞர் அணி அமைப்பாளர் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயந்தி நடராஜன், பாக்கியலட்சுமி, சந்தியா சாமுண்டீஸ்வரி,சங்கரி, விஜயசாந்தி, கனிமொழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தனிப் பெரும்பான்மையுடன் கழகம் வெற்றி பெறும்!

# புதுக்கோட்டையில் -மார்ச் 1 ல் பிறந்த 10 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கி பேச்சு!

புதுக்கோட்டை, மார்ச் 10–

புதுக்கோட்டை ராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் ஒன்றாம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் மார்ச் 1ஆம் தேதி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அன்று பிறந்த 10 குழந்தைகளுக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஏற்பாட்டின் பேரில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தங்க மோதிரங்களை அணிவித்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை எம்.எல்.ஏ. வை.முத்துராஜா மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

அப்போது அமைச்சர் எஸ். ரகுபதி கூறுகையில்:

அ.தி.மு.க.வில் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு குறைந்த கட்சி தான் உள்ளது. அவர்கள் கூட்டணியை ஆரம்பித்து பேச்சுவார்த்தையை தொடங்கவில்லை. யார் மேஜர் பார்ட்னர் யார் மைனர் பார்ட்னர் என்ற முடிவும் வரவில்லை.

அதனால் அ.தி.மு.க. கூட்டணியில் தி.மு.க. கூட்டணியையும் ஒப்பிடக்கூடாது. அ.தி.மு.க. கூட்டணி இடியாப்பச்சிக்கல நாங்கள் கூட்டணி சுமூகமாகத்தான் பேசுவோம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டணியை சரியான பாதையில் கூட்டணியை கொண்டு செல்வார்.

மக்களுக்காக கொடுக்கின்ற பணம்தான். தேர்தல் தேதி அறிவிக்கவில்லை. ஏற்கனவே தமிழ்நாட்டு மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்து வைத்திருப்பார்கள் அவர்களுக்குத்தான் வாக்களிப்பார்கள் பணத்தை எல்லாம் கொடுத்து அவரிடம் வாக்குகளை பெற முடியாது. சாதனைகளை செய்துதான் வாக்குகளை வாங்க முடியும் எங்களது சாதனைகளை மக்கள் மனதில் இருக்கின்றது அதன் மூலமாக நாங்கள் வாக்குகள் வாங்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை இன்றைய சூழ்நிலையில் அ.தி.மு.க.வை டெபாசிட் இழக்க கூடிய சூழ்நிலை சில தொகுதியில் உருவாக்கி இருக்கிறது அதை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

பிரதமர் மோடி வேண்டுமென்றால் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும் என்று பகல் கனவு காணலாம். எங்களது கனவு உண்மையான கனவு. எங்களது நினைவும் உண்மையான நினைவு. 200 நிச்சயம். வெல்வோம் 200 படைப்போம் வரலாறு அதில் தமிழ்நாடு சரித்திரத்தின் வரலாறாக இருக்கும். நாங்கள் வீடு வீடாக டோர் டோராக பிரச்சாரத்தை தொடங்கி விட்டோம்

இதுவரை இந்திய சரித்திரத்தில் இல்லாத வகையில் தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே வீடு வீடாகச் சென்று மகளிர் பரப்புரையை மேற்கொண்டுள்ள ஒரே இயக்கம் தி.மு.க. தான். ஒவ்வொரு வீட்டு வாசலையும் தொட்டு விட்டு வந்திருக்கின்றோம். ஒவ்வொரு வாக்காளரையும் ஒரு முறையல்ல இரு முறை சந்தித்து விட்டு வந்திருக்கின்றோம்.

தி.மு.க.வில் இருக்கின்றவர்கள் மிகச் சிறப்பாக பணியாற்ற கூடியவர்கள் என்று தி.மு.க.வின் தலைமைக்கு நன்றாக தெரியும். அவர்கள் என்றைக்கும் வந்தாரை வரவேற்பவர்கள் அவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் தான் தி.மு.க.வில் இருக்கிறார்கள் தவிர அவர்களை எல்லாம் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் இங்கு கிடையாது.

எங்களைப் பொறுத்தவரை யார் வந்தாலும் அவர்களது தகுதிக்கேற்றவாறு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் கட்சித் தலைவர் எந்த முடிவையும் எடுப்பார் எந்த பதவியையும் கொடுப்பார்.

மதுபான ஊழல் என்று சொல்லி அரவிந்த் கெஜ்ரிவால் மீது வழக்கு போட்டு ஆம் ஆத்மி கட்சியை தேர்தல் நேரத்தில் மிகவும் சிரமப்பட வைத்தனர். ஆட்சி அதிகாரம் தங்கள் கையில் இருப்பதால் பொய்யான ஊழல் குற்றச்சாட்டுகளை சொல்வதில் மிக மிக வல்லமையான கட்சி பாஜகவும் பிரதமர் முடியும் தான். அந்த குற்றச்சாட்டுகளை மக்கள் நம்ப மாட்டார்கள். அவர்கள் போட்ட அனைத்து வழக்குகளுமே அடிபட்டுவிட்டது. இந்த குற்றச்சாட்டையும் இதுவரை நிருபிக்கவில்லை யாரையும் குற்றவாளியாக கொண்டு போய் நிறுத்த முடியவில்லை. எங்களைப் பொறுத்தவரை அத்தனை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்து எங்கே கொண்டு போய் வைப்பது. அவருக்கு தான் தெரியும் அவர் பல நாடுகளுக்கு சென்று சொத்துக்களை வாங்கி இருக்கலாம் அம்பானியும் அதன் கையில் வைத்துக் கொண்டு அவர்களது துணையோடு என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் அதைப்பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை எங்களை பொறுத்தவரை நாங்கள் யாரும் எந்த தவறும் செய்யவில்லை எந்த நீதிமன்றத்தையும் எந்த வழக்கையும் சந்திப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம்.

குஜராத்திலும் ராஜஸ்தானிலும் மத்திய பிரதேசத்திலேயும் அங்கே எல்லாம் சட்டம் ஒழுங்கை சென்று பிரதமர் மோடி பார்த்துவிட்டு தமிழ்நாட்டில் வந்து சட்டம் ஒழுங்கை பற்றி பேசினால் நன்றாக இருக்கும்.

எங்களைப் பொறுத்தவரை தனி பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவோம். 118 இடங்களுக்கு மேலே வெற்றி பெற்றால் தனி பெரும்பான்மை தான். எங்களுடைய திமுக 120 இடங்களில் வெற்றி பெற்று விடும் நாங்கள் கூட்டணியை அரவணைத்து செல்பவர்கள். அவர்களுக்கும் தேவையான உதவிகளை செய்து அரவணைத்து செல்வோம். தனிப்பட்ட முறையில் ஆட்சியை பிடிக்க கூடிய அளவிற்கு வெற்றி பெறும்.

இந்த தேர்தலில் எந்த சவாலும் எங்கள் கண்ணுக்கு தெரியவில்லை அதனால் அகம்பாவம் பிடித்து சொல்லக்கூடாது. எது வந்தாலும் நாங்கள் சமாளிப்பதற்கு தயாராக இருக்கின்ற இயக்கம் தான் தி.மு.க. இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.






கன்னியாகுமரி மாவட்ட சமத்துவ மக்கள் கட்சி துணை செயலாளர் ராயல் ஜெயசிங் மற்றும் பீமநேரி முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் சுபா இவர்களின் ஏற்பாட்டில் தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் அ.தி.மு.க மற்றும் சமத்துவ மக்கள் கட்சியை சேர்ந்த 50 க்கு மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்து கொண்டனர். உடன் பொதுக்குழு உறுப்பினர் ஞானபாய், மாவட்ட பிரதிநிதி ரஹ்மான், இம்மானுவேல், கல்யாணசுந்தரம், ஷேக், ஆசீர், மகேஷ், பிரைட், சங்கர நாராயணன், மாதவன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் – முதல்வர் திறந்து வைக்க உள்ளார்!

# ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் 'அன்பகம் உதயம்' திறப்பு விழா!

## கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!



ஈரோடு, மார்ச் 10-

இன்று (10.3.2026) காலை 9 மணி அளவில் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கல சிலை, கலைஞர் படிப்பகம், இளைஞர் அணி அலுவலகம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி அலுவலகம் ஆகியவை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வரவேற்புரையுடன் இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளைக்குச் சொந்தமான இடத்தில் அன்பகம் உதயம் என்ற புதிய கட்டிடத்தை திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொது செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மரு. மதிவேந்தன், மேற்கு மண்டல கழக பொறுப்பாளர், கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி, மாவட்ட கழக செயலாளர்கள் ஈரோடு வடக்கு என். நல்லசிவம், ஈரோடு மத்திய தோப்பு என்.டி.வெங்கடாசலம், திருப்பூர் இல.பத்மநாபன், நாமக்கல் மூர்த்தி,

சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வீ.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், கழக இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா. இளைய ராஜா, தாட்கோ தலைவர் ப.அப்துல் மாலிக், .பிரபு கஜேந்திரன். பி.எஸ். சீனிவாசன், ஜி.பி ராஜா, சி.ஆனந்தகுமார், அன்பகம் செந்தில், ஒன்றிய கழக செயலாளர் வா.கதிர்வேல், சு.குணசேகரன், ஆர்.விஜயகுமார், பா.நடராஜன், சி.முத்துக்குமார், வி.எஸ். சிவகுமார், பி. செங்கோட்டையன், தோப்பு சதாசிவம், மொடக்குறிச்சி பேரூர் செயலாளர் பி.வி. சரவணன், பகுதி கழக செயலாளர்கள் குமார வடிவேல், வ.சி.நடராஜன், வி. செல்வராஜ், பொ. ராமச்சந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன், அக்னி சந்திரசேகர், என்.தண்டபாணி, கா.லட்சுமணகுமார், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கி.ரகுராம், ச.சதீஷ்குமார், எஸ். எஸ்.விஜயராஜன், இரா. நித்தின், மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்த புகழன், துணை அமைப்பாளர்கள் பா.ஜாகீர் உசேன், சே.ரமேஷ், எஸ்.சசிகுமார், அ.பார்த்திபன், அன்பு (எ) அன்பரசன், மற்றும் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர,பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

கூட்டத்தின் முடிவில் கழக இளைஞரணி துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் நன்றியுரையாற்றவுள்ளார். எனவே கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரிஷிவந்தியம் தொகுதியில்

# தி.மு.க. வரலாற்று வெற்றியை பெற கழக நிர்வாகிகள் அயராது உழைத்திட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேச்சு!

திருக்கோவிலூர்,மார்ச். 10–

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில், ரிஷிவந்தியம் தொகுதி தி.மு.க. வரலாற்று வெற்றியைப் பெற கழக நிர்வாகிகள் அயராது உழைத்திட வேண்டும் என்று திருக்கோவிலூர் சந்தப்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசினார்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் திருக்கோவிலூர் சந்தப்பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு தொகுதியின் மேலிடபார்வையாளர் ச.அ.பெருநற் கிள்ளி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜேந்திரன் எஸ்.அய்யனார் எம்.பெருமாள். ஆர்.துரைமுருகன் ஆர்.பாரதிதாசன் பி. என்.ஆர்.அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மணலூர்பேட்டை பேரூர் செயலாளர் எம்.ஜெய்கணேஷ் வரவேற்றார்.

இந்த மாபெரும் செயல் வீரர்கள் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக நிர்வாகிகள் முன்னிலையில் பேசினார். அப்போது அவர் பேசுகையில், 2026 தமிழக சட்டமன்ற தேர்தல் தேதி எப்ப வேண்டுமானாலும் அறிவிக்க வாய்ப்பு உள்ளது, ஆகவே நீங்கள் இன்று முதல் இருந்தே தேர்தல் பணியை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும், மேலும் இந்த சட்டமன்றத் தேர்தல் வரலாறு சொல்லும் வெற்றியாக நமக்கு இருக்கப் போகிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்று எந்நாளும் உழைத்துக் கொண்டிருக்கும் நமது கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் நோக்கம் நிறைவேறும் வகையில், இந்த தொகுதியில் உள்ள அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் அரசின் மூலமாகவோ அல்லது தொகுதி தி.மு.க. சார்பிலோ வழங்கப்பட்டு இருக்கின்றது.

ஒருசட்டமன்ற உறுப்பினர் போன்று அல்லாமல், நான் உங்களில் ஒருவனாக தான் மக்களிடம் எப்போதும் பழகியிருக்கின்றேன் பழகிக் கொண்டு இருக்கிறேன். இனியும் அப்படித்தான் இருப்பேன், இனி எப்போதும் இருப்பேன், இது தான் என் சுபாவம் அது உங்களுக்கும் நன்கு தெரியும்.

மாநிலத்தில் வளர்ச்சி பெற்ற முதல் 10 தொகுதிகள் என தேர்வு செய்யும்போது அதில் ஒரு தொகுதியாக ரிஷிவந்தியம் தொகுதி கண்டிப்பாக இருக்கும். அந்த அளவுக்கு அனைத்து துறைசார்பிலும் இந்த தொகுதியில் வளர்ச்சி திட்ட பணிகளும், நலத்திட்ட உதவிகளும்

செய்திருக்கின்றேன். ஆகவே கடந்த ஐந்து ஆண்டுகளில் ரிஷிவந்தியம் தொகுதி அபார வளர்ச்சி பெற்று உள்ளது, மேலும் இந்த தொகுதி வளர்ச்சி பெற நீங்கள் கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் அதிக வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று வரலாற்று வெற்றி பெற வேண்டும்.

இந்த பணி மேலும் தொடர தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக மீண்டும் தொடரவும், கழக ஆட்சி ஏழாவது முறையாக தொடர்ந்திடவும் நீங்கள் அனைவரும் அயராது உழைத்திட வேண்டும் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் ஒன்றியக்குழு தலைவர்கள் அஞ்சலாட்சி அரசகுமார், வடிவுக்கரசி சாமிசுப்பிரமணியன். மாவட்ட துணை செயலாளர் அண்ணாதுரை, பொருளாளர் கோவிந்தராஜ், தோதல்பணிக் குழு நிர்வாகி தனம்சக்திவேல், ஒன்றிய துணைசெயலாளர் தணிகாசலம், வக்கீல் தெய்வீகன், மேற்பார்வையாளர் லலித் குமார் உள்ளிட்ட தொகுதிக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர், முடிவில் ஒன்றிய செயலாளர் வி.கிருஷ்ண மூர்த்தி நன்றி கூறினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம்வடவெட்டி ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர்கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளனர்.




இனமானப் பேராசிரியர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.நிகழ்வில் களக்காடு நகர செயலாளர் மணி சூரியன், பொறுப்புக் குழு உறுப்பினர் ஆதிபாண்டி,கவுன்சிலர்கள் கோபி. கோபால கண்ணன்,முருகன், சின்னத்துரை,களக்காடு சோமசுந்தரம்,பணகுடி எட்வின் உட்பட பலர் கலந்து கொண்டனர்.